2020 ஜனவரி 8]

8—

துணை மின் நிலையம்

***39439—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *திருத்தணி தொகுதி, பூனிமாங்காடு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தணி தொகுதி, பூனிமாங்காடு கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அந்தத் துணை மின் நிலையத்தில் போதிய அளவிற்கு மின் பளு இல்லாத காரணத்தால், இப்போதைக்கு தேவையில்லை. இருந்தாலும், எதிர்காலங்களில் தேவைப்படின் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

ஏழைகள் ஏற்றம்பெற, தேசிய அளவில், தமிழ்நாட்டில்தான் முதன்முதலில் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்து, சரித்திரம் படைத்தவர் எங்கள் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத்

தட்டும் ஒலி) அவர் வழியில், அனைத்துத் தரப்பு மின் நுகர்வோர்களுக்கும் பல மணி நேரம் மின் தடை அமலில் இருந்ததை மாற்றி, திட்டங்கள் வகுத்துத் தந்து, மின்மிகை மாநிலமாக மாற்றி சாதனை படைத்திட்டவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் வழியில், சுமார் 8,118 கோடி ரூபாய் அளவில் மின் நுகர்வோர்களுக்கு மானியமாகத் தந்து, சீரான தடையில்லா மின்சாரம் தந்து சாதனை படைத்து வருபவர் சேலம் தந்திட்ட தங்கம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதி, பூனிமாங்காடு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போதுமான இடம் அந்தக் கிராமத்திலேயே இருக்கிறது. எனவே, விவசாயிகள் நிறைந்த அந்தப் பகுதியில், அம்மா அவர்களின் அரசு அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து, நிதி ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டிலேயே நிறைவேற்றித் தர முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதியில் மின் பளு குறைவாக இருக்கின்றது என்று சொன்னேன். அங்கே 2x10 MVA கொண்ட transformers இருக்கின்றன. அதில் மொத்தமே 10 MVA அளவிற்குத்தான் load இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த பகுதியிலே மின்னழுத்தம் குறைவாக இருக்கிறது என்று சொன்ன காரணத்தினால், கூடுதலாக ஒரு மின்மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தேவைப்படின், பிற்காலத்தில் அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

2020 ஜனவரி 8]

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில், திருத்தணி நகராட்சிப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கு வேண்டிய தொகையான 2.15 கோடி ரூபாய் செலுத்தப்பட்டுவிட்டது. திருத்தணி ஒரு கோயில் நகரமாகும்; வளர்ந்து வரும் நகரமாகும். எனவே, மின் தேவை அதிக அளவில் உள்ளது. பல வெற்றிகளைக் குவித்து வருகிற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, திருத்தணியில் உடனடியாக துணை மின் நிலையம் அமைக்க பணிகளைத் தொடங்க முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய பகுதியில் இடம் எடுக்கப்பட்டிருக்கிறது. 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் நிதி Khadi Board–க்கு கட்டப்பட்டிருக்கிறது. உடனடியாக tender விடப்பட்டு அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதியில் மடிப்பாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம் ஆகிய பகுதிகள் உள்ளன. அந்தப் பகுதிகளில் அதிகப்படியான குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்பட்டு, இன்றைக்கு வளர்ந்து வருகின்ற பகுதியாக உள்ளது. அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுகின்ற ஒரு நிலையில், அனைத்து தனியார் கட்டட நிறுவனங்களும் ஈடுபட்டு, அந்தப் பகுதியை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கின்ற நிலை உள்ளது. அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுகின்ற அந்தப் பகுதிகளில் துணை மின் நிலையத்தை வருங்காலங்களில் அமைப்பதற்கு இடத்தைத் தேர்வு செய்வதில் சிரமம் இருக்கும். அந்த இடத்திலே துணை மின்

நிலையத்தை அமைக்க இடத்தைத் தேர்வு செய்யும்போது, பக்கத்தில் இடமில்லை என்கின்ற ஒரு நிலைதான் ஏற்படும். ஆகவே, மிகப் பெரிய அளவில், அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுகின்ற கட்டுமான நிறுவனங்கள், அங்கே துணை மின் நிலையத்தை அமைப்பதற்கும் இடத்தைத் தேர்வு செய்கின்ற நிலையை உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மடிப்பாக்கம், உள்ளகரம் மற்றும் புழுதிவாக்கம் பகுதிகளில் துணை மின் நிலையம் வேண்டுமென்று தொடர்ந்து பலமுறை இந்த அவையில் நான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். இப்போது பள்ளிக்கரணை, வேளச்சேரி போன்ற பகுதிகளில் அஸ்ஸாம் போன்ற மாநிலங்களிலிருந்து வருபவர்கள் தங்கிச் செல்வதற்கான குடியிருப்புகள் கட்ட இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில், தற்போது பள்ளிக்கரணையில் இடம் இருக்கின்றது. சென்னை மாநகராட்சியால் குப்பை கொட்டப்படுகின்ற, தரம் பிரிக்கப்படுகின்ற இடமெல்லாம் அங்கே காலியாக இருக்கின்றது. அந்த இடத்தைத் தேர்வுசெய்து, அங்கு உள்ளகரம், புழுதிவாக்கம், மடிப்பாக்கம் பகுதிகளுக்கான ஒரு துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ECR–ல் கொட்டிவாக்கம், பாலவாக்கம் பகுதிகளில் அதிகப்படியாக மின்னழுத்தம் இருக்கின்றது. பாலவாக்கத்தில் நம்முடைய University–க்குச் சொந்தமாக ஒரு இடம் இருக்கிறது. சம்பந்தப்பட்டவர்களிடம் பேசி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு ஒரு துணை மின் நிலையத்தை அமைத்துக் கொடுத்து, அந்தப் பகுதியில் மின்னழுத்தத்தை விரைவில் போக்கிட உதவுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை; உண்மை இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அந்தக் கட்டுமான நிறுவனங்கள் அங்கு துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் கொடுப்பதற்கு மறுக்கின்றார்கள்.

2020 ஜனவரி 8]

நாங்களும் எவ்வளவோ முறை கேட்டுக் கொண்டிருக்கின்றோம். உள்ளாட்சித் துறையின் வாயிலாக அவர்களுக்கு notice எல்லாம்கூட கொடுத்திருக்கிறோம். அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுகின்றபோதே துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான இடத்தை ஒதுக்கிவிட்டு கட்ட வேண்டுமென்றுதான் நாங்கள் சொல்கிறோம். ஆனால், கட்டடம் கட்டி முடித்ததற்குப் பின்னால், துணை மின் நிலையம் அமைக்க இடமில்லையென்று சொல்கின்றபோதுதான் இதுபோன்ற பிரச்சினைகள் வருகின்றன. இதுபோன்ற பிரச்சினைகள் நிறைய பகுதிகளில் இருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மடிப்பாக்கம் பகுதியில் கோடைக்காலத்திலே மின்னழுத்தம் குறைவாக இருப்பது உண்மை. ஏனென்று சொன்னால், அங்கு துணை மின் நிலையம் அமைப்பதற்குப் போதிய இடமில்லாமல் இருக்கின்றது. இப்போது பள்ளிக்கரணையிலே marshland இருந்தாலும்,வனத்துறை அனுமதி கொடுக்க மறுத்த காரணத்தினால், அங்கு இப்போது UG cable போட்டுக்கொண்டிருக்கின்றோம். அந்தப் பணிகள் முடிந்ததென்று சொன்னால், கொட்டிவாக்கம் பகுதியில் மின்னழுத்தம் குறைவதற்கு வாய்ப்பிருக்கின்றது. மடிப்பாக்கம் பகுதியில் நாங்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம்.

பொதுவாக, நீங்கள் சொல்கின்ற அந்தப் பகுதிகளில் இடங்களை எல்லாம் வாங்குகின்றபோது, கார்ப்பரேஷன் கேட்கின்ற தொகை அதிகமாக இருக்கின்றது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. நரசிம்மன் அவர்கள்கூட, துணை மின் நிலையம் கேட்டார். திருத்தணியில் 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் 3.95 ஏக்கர் நிலம் வாங்கியிருக்கின்றோம். ஆனால், மாநகராட்சிப் பகுதிகளில் நிலத்தின் விலை எந்த அளவிற்கு இருக்கும் என்பது உங்களுக்கும் தெரியும். நிலத்தின் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தால்தான், நிலத்தை வாங்கி இதை அமைப்பதில் சிரமங்கள் இருக்கின்றன. இருந்தாலும் உரிய விலையைக் கொடுக்கிறோம் என்று சொன்னாலும்கூட, கார்ப்பரேஷனும், மற்ற துறைகளும் அந்த இடம் தங்களுக்குத் தேவையென்று சொல்லி, நிலத்தை வழங்க மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். மடிப்பாக்கம், உள்ளகரம் பகுதியிலே கோடைக்காலத்திலே இதுபோன்ற மின்னழுத்தப் பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாங்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். அதற்கு மாற்று வழியும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த கோடைக்காலத்தில் உடனடியாகச் செய்ய முடியாது என்ற காரணத்தினால், மாற்று வழியிலே மின்சாரம் கொடுப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்து

கொண்டிருக்கின்றோம். இருந்தாலும், எதிர்காலத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு உரிய இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட கண்டறிந்து சொன்னால், அந்த இடத்தை வாங்குவதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் மின்சார வசதியைப் பூர்த்தி செய்யும் வகையிலே, கள்ளக்குறிச்சியிலே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தார்கள். அங்கு இடம் தேர்வு செய்வதிலே சிறிது சிரமம் இருந்ததால், அந்த Sub–station அமைப்பதற்குக் காலதாமதமானது. தற்போது பெருவங்கூர் ஊராட்சி எல்லைக்குட்பட்ட கிராமத்திலே அரசுக்குச் சொந்தமான 4 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல், S.E. office–ம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இவை இரண்டிற்கும் சேர்த்து, பெருவங்கூர் ஊராட்சியில் தற்போது 4 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் இந்த ஆண்டு துணை மின் நிலையம் அமைப்பதற்கும், S.E. office அமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில், ஏற்கெனவே கண்டறியப்பட்ட அந்த இடத்திற்குச் செல்கின்ற அணுகுசாலை சரியாக இல்லாத காரணத்தினால்தான் மாற்று இடம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த 4 ஏக்கர் இடத்தைக் கண்டறிந்து கொடுத்திருக்கிறார்கள். அதுசம்பந்தமாக கோப்பு அரசின் ஒப்புதலுக்காக சுற்றோட்டத்தில் உள்ளது. சம்பந்தப்பட்ட துறைகளின் வாயிலாகச் சென்றுகொண்டிருக்கிறது. அனுமதியை உடனடியாகப் பெற்று, அந்த இடத்தில் S.E. office–ம், அதைப்போல துணை மின் நிலையமும் அமைப்பதற்கு துறை நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி சுற்றுவட்டாரப் பகுதிகளில் குறைந்தழுத்த மின் பிரச்சினை காரணமாக இல்லங்களுக்கும், விவசாய பம்பு செட்டுகளுக்கும் மின் விநியோகம் செய்வதில் சில பிரச்சினைகள் உள்ளன. ஏற்கெனவே மூவாநல்லூர் sub–station–லிருந்து மன்னார்குடி, வடபாதி, சித்தேரி 33 கே.வி. துணை மின் நிலையத்துக்கு line எடுத்துக்கொண்டு போகிறீர்கள். இப்போது, புதிதாக நெடுவாக்கோட்டையில் ஒரு line எடுத்து அங்கே ஒரு S.S. அமையப்பெற்று வருகிறது. நீடாமங்கலம், எடமேலையூர் பகுதிகளிலும், வடூரிலிருந்து line எடுத்துக்கொண்டு போய், ஒரு பணியைச் செய்துகொண்டிருக்கிறீர்கள். இந்தப் பணிகள் இரண்டுமேslowஆகநடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.அதேபோல், நீடாமங்கலத்தில், ஒரு urban feeder–முன்னர் கேட்டதுதான். அந்தப் பணியும் மிகவும் தாமதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதையும் நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். புதிதாக பைங்காநாடு, முக்குளம் சாத்தனூர், கருவாக்குறிச்சி மையம் மற்றும் ராயபுரம் பகுதிகளில் 33 கே.வி. துணை மின் நிலையம் அமைத்தால் மட்டும்தான் அந்த area முழுவதும் stabilise ஆகும். அதையும் நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். சவலக்காரன் பகுதியில் ஒரு 110 கே.வி. துணை மின் நிலையம் அமைந்தால் மட்டும்தான், அங்கே கிழக்குப் பகுதியில் முழுவதுமாக மின் விநியோகம் stabilise ஆகும். அதேபோல், கூத்தாநல்லூர் பகுதியில் ஒரு 230 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு நீங்கள் try செய்துகொண்டிருக்கிறீர்கள். ஆனால், அங்கே நிலம் எடுப்பதில் அரசுக்கு கொஞ்சம்

பிரச்சினைகள் இருக்கின்றன. அதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பொதுவாகவே, transformers கிடைப்பதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதையும் நீங்கள் கவனத்தில்கொண்டு, மன்னார்குடி பகுதியில் சீரான மின் விநியோகம் அமைய நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த டெல்டா பகுதியில் நாகப்பட்டினம் இல்லையென்றால், திருவாரூர் மாவட்டத்தில் 400 கே.வி. திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முதலில் மணல்மேடு பகுதியில் கண்டறியப்பட்ட இடம் கொடுக்க முடியாது என்று சொன்ன காரணத்தினால், இப்போது ஆதீனத்தினுடைய இடத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் நாங்கள் சொல்லியிருக்கின்றோம். இப்போது ஆதீனத்திற்குச் சொந்தமான இடத்தை நாங்கள் பார்த்திருக்கின்றோம். ஆதீனத்திற்குச் சொந்தமான இடத்தை மாற்றுவதற்கு HR&CE–யிடம் permission வாங்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் எங்களுக்கு அந்த இரண்டு மாவட்டங்களில் எங்கேயாவது இடத்தைக் கண்டறிந்து சொன்னாலோ அல்லது தனியாரிடத்திலேயிருந்து மின்சார வாரியத்திற்கு இடம் வாங்கித் தருவதற்குத் தயாராக இருந்தாலோ உடனடியாக அமைத்துக் கொடுக்க நாங்களும் தயாராக இருக்கின்றோம். அங்கே மின்னழுத்தம் குறைவாக இருப்பது உண்மை. டெல்டா மாவட்டங்களில் விவசாய மின்னிணைப்புகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே மின்னழுத்தம் குறைவாக இருக்கின்றது. இந்த நிலையில், நாங்கள் கிட்டத்தட்ட ஓராண்டு காலமாக அங்கே இடத்தைத் தேர்வு செய்து வருகின்றோம். இடம் கிடைப்பதுதான் சிரமமாக இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர்களிடத்திலும் சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் துணை மின் நிலையம் அமைக்க இடத்தை ஏற்பாடு செய்து தந்தால், மின்சார வாரியம் உடனடியாக அமைக்கத் தயாராக இருக்கிறது. தனியாரிடத்திலே

2020 ஜனவரி 8]

நீங்கள் கேட்டு வாங்கித் தரும் இடத்திற்கான தொகையை நாங்கள் மின்சார வாரியத்தின்மூலம் கொடுக்கிறோம்; நாங்கள் தானமாகக் கேட்கவில்லை. மின்சார வாரியம் மூலமாக தொகையை வாங்கிக்கொடுக்கிறோம். ஆதலால், இடம் கண்டறியப்பட்டால் உடனடியாக அங்கே துணை மின் நிலையம் அமைக்கப்படும். அந்தப் பணி மெதுவாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை அதிகாரிகள் உடனே ஆய்வு செய்து, விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜர்தான்கொல்லை, பீஞ்சமந்தை, பாலாம்பட்டு ஆகிய மூன்று ஊராட்சிகள் சற்றேறக்குறைய 20,000 மக்கள் தொகை கொண்ட மலை கிராமங்களாகும். மழை பெய்தால், காற்றடித்தால் ஒடுக்கத்தூரிலிருந்து அந்த மலை கிராமங்களுக்குச் செல்லக்கூடிய மின் பாதையில் பாதிப்பு ஏற்பட்டு, அந்த மூன்று கிராமங்களிலும் மின்தடை ஏற்படுகின்றது. ஓர் அரசு நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டபோது, அவர்களிடத்தில் அந்தக் கோரிக்கையை வைத்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொல்லி, உடனடியாக அதைச் செய்து தர வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். துணை மின் நிலையம் அமைக்க 2 ஏக்கர் நிலம் தேவை என்றும் சொன்னார்கள். ஆனால், இதுவரை அதற்குண்டான பணிகள் அங்கே எதுவும் நடைபெறவில்லை. மலைக்குக்கீழே ஒரு மணி நேரம் நமக்கு மின்சாரம் இல்லையென்றால், மிகவும் அவதிப்படுகின்றோம். ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு, சாலை வசதி இல்லாத, 20,000 மக்கள்தொகை கொண்ட அந்த மூன்று மலை கிராமங்களில் உடனடியாக ஒரு 110 கே.வி. துணை மின் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் அரசு விழாவில் நான் கலந்துகொண்டபோது, அதுகுறித்து என்னிடத்திலே சொன்னார். உடனடியாக மாவட்ட ஆட்சியரிடத்தில் தெரிவித்தவுடன், மாவட்ட ஆட்சியரும் அதற்குண்டான இடத்தை உடனடியாக ஒதுக்கித் தருவதாகச் சொல்லியிருக்கின்றார். ஒரு வாரத்திற்கு முன்பாக, சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடங்கவிருக்கின்றது என்ற காரணத்தினால், நான் மாவட்ட ஆட்சியரிடம் அதுகுறித்து கேட்டேன். அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார். அங்கு துணை மின் நிலையம் அமைக்க இடம் கிடைத்தவுடன், கூடிய விரைவில் அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

புதிய கலையரங்கம்

***5764—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சிறுநாகுடி ஊராட்சி, புத்தூர் கிராமத்தில் புதிய கலையரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சிறுநாகுடி ஊராட்சி, புத்தூர் கிராமத்தில்